11.08.2022

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.205/18

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசாரியா | சாதி | |
| த/பெ | ஜோதிமூத்து | மதம் | |
| கிராமம் | கடலையூர் | தொழில் | |
| தாலுக்கா | எட்டையாபுரம் | வயது | 48 |
| மாவட்டம் | தூத்துக்குடி | தேதி | |

( 11.08.2022 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் கடலையூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் ஏற்கனவே 2007ல் கொத்தனார் வேலை தான் பார்த்தேன். நான் சென்னை மற்றும் தூத்துக்குடியில் ஆட்களை வைத்து கட்டிட வேலை செய்துவருகிறேன். குமார் மேஸ்திரி என்பவரை எனக்கு தெரியும், அவர் 2011ல் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அப்பார்ட்மெண்ட் கட்டுமான பணி நடந்தபோது எனக்கு குமார் மேஸ்திரி அறிமுகம் ஆனார். அங்கு நானும் வேலை பார்த்தேன். 2010ல் விழுப்புரத்தில் பெரிய ஆஸ்பத்திரி கட்டினார்கள். அந்த காலகட்டதில் இங்கு வந்து வேலை செய்தேன். சாப்பாடு பிடிக்கவில்லை என்பதால் ஒரு வாரத்தில் ஊர் சென்றுவிட்டேன். 2011ல் குமார் மேஸ்திரி அறிமுகம் ஆன போது அவர் விழுப்புரத்தில் குடியிருப்பதாகவும், அங்கு வேலை எடுத்து செய்வேன் என்றும், வேலை தேவை என்றால அங்கு வந்து தன்னை பாருங்கள் என்று சொல்லிருந்தார்.

அதன்பிறகு, 2 வருடம், கடந்து போனதால் எனக்கு அவருடைய செல்போன் நெம்பர் தவறிவிட்டது. 2014 வருடம் 6ம் தேதி செவ்வாய் கிழமை கோவில்பட்டி புதிய பேருந்து நிலையத்தில் நான் விழுப்புரம் வந்து குமார் மேஸ்திரி சந்திப்பதற்காக கிளம்பினேன். 7ந் தேதி காலை 5.00 மணிக்கு நான் விழுப்புரதில் ' இறங்கினேன். ஆஸ்பத்திரி செல்ல டவுன் பஸ் இல்லை. 5.300 மணிக்கு விக்கிரபாண்டியபுரம் செல்லும் பஸ் வந்தது. பெரிய அரசு மருத்துவக்கல்லுரி பேருந்து நிறுத்தத்தில் நான் இறங்கினேன். அப்போது அங்கு கடைகள் இல்லை. ஒரு தள்ளுவண்டியில் டீ கடை இருந்தது. நான் விசாரித்தேன். குமார் மேஸ்திரி பற்றி விசாரித்தேன் அவர் அங்கு இருப்பதாக சொல்லவில்லை. என்னிடம் ரூ.450/ மட்டும் இருந்தது. எனது பரிசில் அந்த பணம் இருந்தது. எனது கருப்பு நிற பேன்ட் பாக்கெட்டில் அந்த பர்சினை வைத்திருந்தேன். அந்த பர்ஸ் கருப்பு நிறமானது. நான் குமார் மேஸ்திரி இல்லாததால் சென்னை செல்லலாமா அல்லது ஊர் செல்லலாமா என யோசித்துவிட்டு ஊர் செல்ல முடிவு செய்துவிட்டு ரயில் நிலையத்திற்கு காலை 8,,8.30 மணியளவில் சென்றேன். பிளாட்பார்ம் எண்.1ல் போயி டிக்கட் கவுண்டரில் சென்று குருவாயூர் ரயில் எத்தனை மணிக்கு வரும் என்று கேட்க சென்றேன். அந்த நேரத்தில் திருச்செந்தூர் ரயில் வந்ததால் கூட்டமாக இருந்தது. யாரோ எனது பேன்ட் பையியல் இருந்த பர்ஸ்சை உருவுவது தெரிந்தது. நான் திரும்பிய போது ஒரு நபர் எனது பர்ஸ்சை அடித்துவிட்டு ஓடினான். காசை கொடு காசை கொடு என்று சொல்லிக்கொண்டே அவனை விரட்டினேன். எனது காசை கொண்டு ஓடுகிறான். பிடியுங்கள் பிடியுங்கள என்று கத்தினேன். அவன் 2வது பிளாட்பார்த்தில் குதித்து விழுந்தான். பின்னர் எழுந்து ஓடினான். கடைசியில் இருந்த பொது மக்கள் பலர் அவனை பிடித்து அடித்தார்கள். 10,15 பேர் அடித்தார்கள். அங்கு பெரிய மீசை வைத்திருந்த ஏட்டு ஐயா வந்து அவனை அடித்தவர்களை விலக்கிவிட்டார். அந்த ஏட்டுஜயா நீதிமன்றத்தில் இருக்கிறார்(சாட்சி ஆஜரில்

இருந்த 2வது எதிரி பாலமுருகன் என்பவரை அருகில் சென்று அடையாளம் காட்டுகிறார்.) அந்த ஏட்டு ஐயா லோகேஷ் என கத்தி ஒரு போலீஸ்காரரை அழைத்தார். அந்த லோகேஷ் என்பவர் வந்ததும், ஏட்டு ஐயாவும் அவரும் எனது பர்ஸ்சை அடித்த நபரை அழைத்து சென்றார்கள். அந்த பர்ஸ்சை அடித்த நபரின் உயரம் 4 1/2 அடி இருக்கும். மொட்டை போட்டு சற்று முடி வளர்ந்த நிலையில் இருந்தது.( அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கினங்கவும், நீதிமன்ற நேரமின்மை காரணமாகவும் ஒத்திவைக்கப்படுகிறது.)